*10*

# வல்லமை, புரிந்து கொள்ளுதல் மற்றும் பரிபூரணத்திற்காக ஜெபம்

## (3:14-21)

*பவுல் தனது ஊழியம் புறஜாதிகளுக்காக என்று எண்ணி, தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றும் வழி சபைதான் என்பதையும், கிறிஸ்துவின் செய்தியைக் கேட்டு ஏற்றுக் கொண்டவர்கள் தேவனிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அனுபவிக்கிறார்கள் என்பதையும் அறிந்து, தேவனிடத்தில் அவர் விண்ணப்பிக்கிறார்.*

### *முகவுரை (3:14, 15)*

***[14]இதனிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகரணராகிய [15]நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு.***

***வசனம் 14.*** இரகசியத்தின் நோக்கம் நிறைவேறவும் வெளிப்படவும் பதிலளிக்கப்பட்ட ஜெபம் அவசியமானது. அதாவது, எபேசுவிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு தேவையான பெலத்தையும் வழிநடத்துதலையும் சபையாக தேவனை நோக்கிப் பார்ப்போருக்கு அளிக்கப்படுகிற இதனிமித்தம் என்பது இரகசியம் பவுல் பற்றி சொன்ன எல்லாவற்றையும், வசனம் 1ல் நமக்குப் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தைகளையும் நமக்கு நினைப்பூட்டி சுட்டிக் காட்டுகிறது. அங்கேயும், இங்கே இருப்பது போல, தேவனுடைய திட்டத்தில் பங்கு கொண்டவர்களுக்கு பெரிதான சிலாக்கியத்தைக் குறித்து பவுல் பேசினார். 3:14-21ல் குறிப்பிடப்பட்டுள்ள ஜெபம் சபைக்கு தேவன் கொடுத்த - ஊழியத்தை நிறைவேற்றும் வல்லமைக்கான வேண்டுதல்.

*நான் முழங்கால் படியிட்டு* என்பது தாழ்மையையும் நம்பிச் சார்ந்திருக்குதலையும் குறித்த எண்ணத்தைத் தெரிவிக்கிறது. ஜெபிக்கும் போது இருக்க வேண்டிய உடலமைப்பு எனும் யூகம் இருதயத்தில் இருக்க வேண்டிய எண்ணத்தைப் போல் முக்கியமானதல்ல. வேதாகமத்தில் பலதரப்பட்ட ஜெப நேர உடல் அமைப்பு வைத்துக் கொள்ளப்பட்டதை குறிப்பிடுகிறது. அவை நின்று ஜெபித்தல் (மாற்கு 11:25; லூக்கா 18:11, 13), முழங்கால் படியிட்டு ஜெபித்தல், (1 இராஜாக்கள் 8:54; தானியேல் 6:10; லூக்கா 22:41; நடபடிகள்

*7:60; 20:36; 21:5),* மேலும் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து ஜெபித்தல் *(மத்தேயு 26:39)* போன்றவை.

பிதாவை நோக்கி என்ற வார்த்தை கிரேக்க முன்னிடைச் சொல்லிருந்து (*pros*), மொழிபெயர்க்கப்பட்டது, அதன் பொருள் "திசையில், நேரடியாகவும் மன ரீதியாகவுமான திசையை நோக்கி."[1] அவர் பிதாவை நோக்கி தனது முகத்தைத் திருப்பி ஜெபித்தார். யோவான் 1:1ல் அதே (பிதாவை என்ற) முன்னிடைச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது, அங்கே இயேசுவானவர் "தேவனோடு இருந்தார்" என்று சொல்லப்படுகிறது. தேவனைப் "பிதாவாக" எபேசியரில் அநேக இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது (காண்க 1:2, 3, 17; 2:18; 4:6; 5:20; 6:23). இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன், பவுலுக்கும் எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கும் கூட பிதாவானவர்தான்.

**வசனம் 15.** பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் என்பது ஒரு குடும்பத்திற்குரிய பெயராக தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட பெயர். அவரே நாமகரணரானார். இது பரலோகத்திலுள்ள தேவ தூதர்களையும் பூமியிலுள்ள யூதர் புறஜாதிகளாகிய அனைவரையும் குறிப்பிட்டு ஒரு பொதுவான அல்லது பரந்த பொருளில் "தேவனுடைய சந்ததி யார்" என்று குறிப்பிடலாம் (காண்க நடபடிகள் 17:28). மிகவும் கண்டிப்பான பொருளில், கிறிஸ்தவர்களை மட்டுமே தேவனுடைய குடும்பமாகச் சொல்லப்படுகிறது என்று, நாம் புரிந்து கொள்கிறோம். பவுல் தனது ஜெபத்தை சிருஷ்டிகரும், கர்த்தரும், எல்லாருக்கும் மீட்பருமாகிய தேவனிடத்திலே ஏறெடுத்தார்.

## ஆவியானவர் மற்றும் கிறிஸ்துவின் வல்லமையால் நிரப்பப்பட விண்ணப்பம் (3:16, 17, 19)

**16நீங்கள் அவருடைய ஆவியானாலே உள்ளான மனுஷனிலே பலப்படவும், 17விசுவாசத்தினோலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், … 19அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அனுக்கிரகம் பண்ணவும்.**

**வசனங்கள் 16, 17.** பவுல் எபேசியர்களுக்காக மூன்று விண்ணப்பங்களை ஏறெடுத்தார். ஒவ்வொரு விண்ணப்பத்திலும் சொற்றொடர்களை இணைக்கும் சொற்கள் *hina* என்பதில் பயன்படுத்தப்பட்டுள்ளது, அவை "நோக்கம், திட்ட முன்மாதிரி, விளைவு ஆகிய வார்த்தைகள்"[2] பயன்படுத்தப்பட்டுள்ளது. பவுலின் ஜெபம் மூன்று நோக்கங்களை அல்லது திட்ட முன் மாதிரிகளைக் கொண்டவை, அது அவருடைய வேண்டுதல்களாகப் பயன்படுத்தப்பட்டவை. அவர் தமது ஜெபத்தைத் துவங்கி இந்த விண்ணப்பங்களைக் கேட்டு அவருடைய மகிமையின் ஐசுவரியத்தின் படியே அனுக்கிரகம் பண்ண வேண்டும் என்று சொல்லுகிறார். இந்த வார்த்தைகள் அவருடைய முந்தைய 1:17, 18ல் ஜெபித்ததை மனதில் கொண்டு வருவதைப் போல், "மகிமையின் பிதா" தாமே எபேசியர்களுக்கு குறிப்பிட்ட ஆசீர்வாதங்களைத் "தந்தருள" வேண்டுமென்று பவுல் ஜெபிக்கும் போது வேண்டிக் கொண்டார். நமக்கு முன்பாக இருக்கிற இந்த வசனப் பகுதியில், பவுல் "தந்தருள" என்பதற்குப்

பதிலாக "அனுக்கிரகம் பண்ண" வேண்டும் என்று கேட்டார். "மகிமையின் ஐசுவரியத்தின்படியே" என்பது தேவனுடைய வல்லமையின் அபரிதமான செயலைக் குறிப்பிட பவுல் பயன்படுத்திய விதம் அது. ரோமர் 9:23, பிலிப்பியர் 4:19, மற்றும் கொலோசெயர் 1:27 ஆகிய வசனங்களிலும் இதற்கொத்த சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது. ரோமர் 6:4ல் "மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல" என்று அவர் சொன்னபோது, "வல்லமையைக்" குறிக்கும்படி அவர் "மகிமை" என்ற வார்த்தையை பயன்படுத்தினார். எபேசியர் 1:19, 20ல், கிறிஸ்து தேவனுடைய சத்துவத்தின் வல்லமையின்படியே எழுப்பப்பட்டார் என்று அவர் சொன்னார்.

தேவனுடைய அளவிடப்படாத வல்லமை அவருடைய ஆவியினாலே விடுதலையாக்கி எபேசியரின் உள்ளான மனுஷனிலே பெலப்படுத்தவும், அதினால் வசனங்கள் 10, 11ல் குறிப்பிடப்பட்ட ஊழியத்தை நிறைவேற்றவும் பவுல் ஜெபித்தார். பவுல் ஜெபித்துக் கேட்ட பலப்படுத்தப்படுதல் அவருடைய ஆவியினாலே, தேவனுடைய பரிசுத்த ஆவியினாலே சுதந்தரத்தின் அச்சாரகமாக முத்திரை போடப்பட்டு வருங்காலங்களில் சுதந்தரத்தைப் பெறுவார்கள் என்று கூறப்பட்டது (1:13, 14). ஆவியின் மூலமே தேவன் தமது பிரசன்னத்தை உணர்த்துகிறார் (2:22). உள்ளான மனுஷன் என்பது தேவனோடு கிறிஸ்தவனுக்கு இருக்கிற உறவுமுறையின் பகுதி - அது தான் தேவனுடைய பிரமாணத்தில் பிரியமாயிருக்க நம்மை அனுமதிக்கிற ஒரு பகுதி (7:22) மனம் "புதிதாகிறதினாலே மறுரூபமாகிறது" (ரோமர் 12:2), அது "நாளுக்கு நாள் புதிதாக்கப்பட்டு வருகிறது" (2 கொரிந்தியர் 4:16). "உள்ளான மனுஷனானது" "ஆவியிலே புதிதாக்கப்பட்டு" மனதிலே கிறிஸ்துவுக்குள் தேவனுடைய புதிய சிருஷ்டியாகிறது (எபேசியர் 4:23, 24; காண்க 2 கொரிந்தியர் 5:17). அது தேவனுடைய சாயலில் வளருகிற ஆவிக்குரிய நபர் (கொலோசெயர் 3:10) சபைக்கென தேவன் கொடுத்த நோக்கத்தை நிறைவேற்ற அது பெலப்படுத்தப்படவேண்டும்.

பவுல் முதல் விண்ணப்பத்தைத் தொடருகிறார்: தேவனுடைய ஆவியினாலே எபேசியர்கள் தங்கள் உள்ளான மனுஷனில் பெலப்பட வேண்டும் என்று கேட்டு, அதினால் கிறிஸ்து (ஒருவேளை) (அவர்களுடைய) இருதயங்களில் வாசம் பண்ணவும் அவர் கேட்டார். "வாசம் பண்ணுதல்" என்ற வார்த்தை (*katoikeō*), ஒரு தொகுப்பு வார்த்தை அது (*oikeō*, ஒரு வீட்டுக்குள்ளாக வாழ்தல்) மற்றும் (*kata*, "தீர்வு காண்"), என்பது "எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வு கண்டு பின் ஒரு வீட்டில் அமர்வு பெற்று வாழ்வது" என்று பொருள்படும்.[3] பவுல் "ஆவியானவர் உள்ளான மனுஷனிலே" இருப்பதாகவும் "கிறிஸ்து உங்கள் இருதயங்களில்" இருப்பது போலவும் பேசினார் இருதயமே "உணர்வுகள், சிந்தனைகள், சித்தங்களுக்குரிய மையப்பகுதியாக இருக்கிறது,"[4] இது மனிதனில் ஒரு பகுதியாயிருந்து "உள்ளான மனுஷனிலே" தொடர்பு கொண்டுள்ளது. ஆவியானவர் கிறிஸ்தவனின் "உள்ளான மனுஷனில்" வாசம் பண்ணுவதுபோல, கிறிஸ்தவர்களின் "இருதயங்களிலே" கிறிஸ்து வாசம் பண்ணுகிறார். இதில் ஒன்றைக் கொண்டிருப்பது மற்றொன்றையும் கொண்டிருப்பதாகும். பவுல் ஏற்கனவே சபையைச் சுட்டிக் காட்டி "தேவன் ஆவியிலே வாசம் பண்ணும் இடமாகக் குறிப்பிட்டார்" (2:22). ஆதலால், சபை, தேவனுடைய ஜனங்களால் அமைவு பெற்றது, அதுவே தேவன், கிறிஸ்து, மற்றும் ஆவியானவர் வாசம்

*பண்ணும் இடம். பவுல் ஆவியானவர் வாசம் பண்ணுதல் கிறிஸ்துவாகிய நபரே ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையிலும் தரக்குறியீடாக இருக்கிறார்,[5] என்று சொன்னார்.*

*கிறிஸ்து இருதயத்தில் வாசம் பண்ணுவது விசுவாசத்தின் மூலமாகத்தான். உள்ளான மனுஷனிலே ஆவியானவர் வாசம் பண்ணி பெலப்படுத்துகிறார் என்பதையும் கிறிஸ்து அவர்களுடைய இருதயங்களிலே வாசம் பண்ணுகிறார் என்பதையும் கிறிஸ்தவன் எப்படி அறிவான்? தனது விசுவாசத்தால் அவன் அறிவான். அவன் இந்த சத்தியங்களை ஏற்றுக் கொள்ளக் காரணம் தேவனே, அவைகளைப் பேசி அவைகள் சம்பவிக்கும்படி அனுமதித்தார். அது விசுவாசத்தால் நடந்தது. எபேசியர்களால் இரட்சிப்பை ஏற்றுக் கொள்ள சாத்தியமாக்கிய சாதனம் விசுவாசம் (2:8). மேலும் தேவனிடத்தில் சேருகிற சிலாக்கியம் பெற்றிருப்பது (3:12). மேலும் விசுவாசத்தினாலே கிறிஸ்து அவர்களுடைய இருதயங்களில் வாசம் பண்ணுவது என்பது ஒரு நிஜவாழ்வு சம்பவமாக இருபுறமும் மரங்கள் அடர்ந்த ஒரு பாதையாக இருந்தது. சபை தனது ஊழியத்தை நிறைவேற்றி வெற்றிபெற, விசுவாசத்தால் அங்கத்தினர்கள் உள்ளே வாசம் பண்ணக்கூடிய கிறிஸ்துவையும் முன்பு ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுது கொடுக்கப்பட்ட பணியைச் சாதிக்கத் தேவையான வல்லமையை அவர் கொடுப்பார்.*

## கிறிஸ்துவின் அன்பை அறிந்து கொள்ள ஏதுவாக விண்ணப்பம் *(3:17-19)*

***17**நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, **18**சகல பரிசுத்தவான்களோடுங் கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; **19**அறிவுக் கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும்.*

***வசனங்கள் 17-19.*** *பவுலின் இரண்டாவது விண்ணப்பமும் கூட இரு சொற்றொடர்களை இணைக்கும் வார்த்தையான hina (அது) என்பதைக் கொண்டு (ஆங்கிலத்தில்) தொடங்குகிறது. வேரூன்றி என்பது பாதுகாப்பாக நடப்பட்டு, மற்றும் நிலை பெற்று என்பது உறுதியான "அஸ்திபாரமாக" நிற்பதைச் சுட்டிக்காட்டுகிறது.[6] கிறிஸ்தவன் மிக உறுதியாக நாட்டப்பட நிலம்* ***அன்பே*** *மற்றும் அவனுடைய மீதி வாழ்க்கையை கட்டியெழுப்ப ஏதுவான அஸ்திபாரமும் அதுவே. இதற்கு ஒத்த ஒரு வாக்கியம் பவுல் கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில் காணப்படுகிறது, அதிலே அவர்மேல் "(கிறிஸ்துவின் மேல்) வேர்கொண்டவர்களாகவும் ... அவர் மேல் கட்டப்பட்டவர்களாகவும்" விசுவாசிகள் இருப்பதாக அவர் சொன்னார் (கொலோசெயர் 2:6). கிறிஸ்து தாமே அன்பின் ஊற்றுக்காரணராயிருக்கிறார்.*

*இந்தக் கிறிஸ்தவர்கள் அறிந்து கொள்ள (katalambanō) ஏதோ வொன்று - அதாவது "உடமையாக்குதல், பற்றிக் கொள்ளுதல், ஆர்வமுடன் ... மனதில் உடமையாக்குதல் ... அறிந்து கொள்ளுதல்"[7] போன்ற சில சத்தியங்கள். எபேசியர்கள் இதை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்கு விளக்கவுரையாளர்கள் பலதரப்பட்டக் கருத்துக்களை ஆலோசனையாகச்*

சொல்லுகின்றனர்.[8] எப்படியிருப்பினும் முன்னும் பின்னும் வருகிற வசனப்பகுதி அவர்கள் தங்களுடைய ஊழியத்தை அன்புடன் செயல்படுத்தி நிறைவேற்ற பவுல் செயலூக்கம் கொடுத்தார் என்பதைக் காட்டுகிறது. வசனம் 17 ல், அவர் அவர்களை "அன்பிலே வேரூன்றி நிலை கொண்டிருக்க" விரும்புவதாகச் சொன்னார், மேலும் வசனம் 19ல், அவர்கள் கிறிஸ்துவின் அன்பை அறிந்து கொள்ளும்படி விரும்புவதாகச் சொன்னார். அவர்கள் தங்களுடைய ஊழியத்தை நிறைவேற்றுகிற வல்லமை ஆவியானவர் வாசம் பண்ணுவதும் கிறிஸ்துவானவர் பண்ணுவதும், மற்றும் அவர்கள் தங்களுடைய ஊழியத்தை நிறைவேற்ற ஏதுவான செயலூக்கம் அன்பு. உயர்ந்த செயலூக்கத்துடன் சரியானதைச் செய்வது குற்றமாகாது, பயமிராதது, அல்லது கனத்தை விரும்புவதுமல்ல, ஆனால் அன்பு மட்டுமே. பவுல் நான்கு படிமானங்கள் மூலம் தெய்வீக அன்பைக் குறிப்பிடுகிறார்.

**அகலம்.** மனிதனுக்கு காட்டப்படும் தெய்வீக அன்பு மனித இனத்தைக் காட்டிலும் அகலமானது.

**நீளம்.** தெய்வீக அன்பு எவ்வளவு நீளத்திற்கு போய்ச்சேரும் என்பதற்கு அளவில்லை.

**உயரம்.** தெய்வீக அன்பு தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கமாக்க கிறிஸ்தவனை உயர்த்திக் காட்டுகிறது.

**ஆழம்.** தெய்வீக அன்பு புதை குழியான பாவத்தின் அளவுக்கு கடந்து சென்று இழந்து போனவர்களை மீட்கிறது.

எபேசியர்கள் தெய்வீக அன்பின் - அன்பின் படிமானங்களின் அளவுகளை - புரிந்து கொள்ளக் கூடியவர்களாயிருந்திருப்பார்களேயானால், பிறகு அவர்கள் அன்பினாலே செயலூக்கம் அடையவும் அறிந்திருப்பார்கள் (அவர்களுக்குக் கிறிஸ்து காட்டிய அன்பு அவர்கள் கிறிஸ்துவிடம் கொண்டிருந்த அன்பு) அது சபைக்கு தேவன் கொண்டிருந்த நோக்கத்தை நிறைவேறச் செய்யும். கிறிஸ்துவின் அன்பை அவர்கள் அறிய வேண்டுமென்று அவர் விரும்பினார். "அறிதல்" எனும் வார்த்தை *gnosis* என்பதுடன் தொடர்புடைய வார்த்தை, அது "உணர்ந்து கொள்ளல், ... அறிவு அல்லது புரிந்து கொள்ளுதல்"[9] என்ற வார்த்தைகளோடு பேசப்படுபவை. கிறிஸ்துவின் அன்பை அவர்கள் சிறப்பாக அறிந்திருக்க வேண்டும் என்று பவுல் அவர்களுக்காக ஜெபித்தார். அவர் தேவனுடைய அன்பு நம்மீது காட்டப்படுவதையும் நம்மீது கிறிஸ்துகொண்டுள்ள அன்பையும் "ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாக" நினைத்தார்.[10] ரோமர் 8:35ல், அவர், "கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?" என்று கேட்டார் பிறகு அதற்குப் பதிலாக எதுவும் "நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்," என்று சொன்னார் (வசனம் 39). பவுல் ஏற்கனவே "மிகுந்த அன்பைக்" குறித்துப் பேசியிருக்கிறார் (2:4) பின்னர் "கிறிஸ்துவும் உங்களில் அன்புகூர்ந்து" என்று வலியுறுத்தினார் (5:2). தேவனுடைய அன்பும் கிறிஸ்துவின் அன்பும் பிரிக்க முடியாதவை என்று கண்ணுற்றார்.

பவுல் எபேசியர்கள் கிறிஸ்துவின் அன்பை புரிந்து கொள்ள வேண்டும் என்று ஜெபித்தார், ஆகிலும் உடனடியாக அவர், "அறிவுக்கு எட்டாத" என்ற

*வார்த்தையையும் வலியுறுத்தினார். விசுவாசி ஒரு குறிப்பிட்ட அளவுக்கு தெய்வீக அன்பின் "அகலமும் நீளமும் உயரமும் ஆழமும்" இன்னதென்று ஆழ்ந்து கவனித்து வான்கொடுமையின் உண்மையை அறிந்து கொள்ளக் கூடும்; "அறிவுக் கெட்டாத" என்பது பெயரச்ச சொல்வடிவில் (huperballo) மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, அதன் பொருள் "ஒன்றின் எல்லை தாண்டி கவனம் செலுத்துதல் அல்லது அப்பால், மனித சாத்தியத்திற்கப்பால், எல்லை கடந்து, மிஞ்சிப் போதல்" என்பன.[11] கிறிஸ்துவின் அன்பை இன்னும் அதிகமாய் அறிந்து கொள்ள கண்டுபிடிக்க முயற்சிப்பது நமது முழுமையான அறிவுக்கு அப்பாற்பட்டது. அது "மிகவும் ஆழமானது, அதன் ஆழம் ஒருபோதும் ஆராய முடியாதது" மிக விசாலமானது அதன் விஸ்தரிப்பு மனித மனதால் ஆராய்ந்து முடியாதது.[12]*

## தேவனுடைய பரிபூரணத்துக்காக வேண்டுதல் *(3:19)*

***[19]தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் (நீங்கள்) நிரப்பப்படவும்.***

*__வசனம் 19.__ பவுல் எபேசியர்களுக்குச் செய்த மூன்றாவது விண்ணப்பத்தில் மீண்டும் hina (அது) எனும் வார்த்தையைக் காணுகிறோம். இந்த வசனத்தில் இந்த பகுதியின் நேரடி மொழிபெயர்ப்பு "நீங்கள் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிரப்பப்பட வேண்டும்." இந்த செயற்பாட்டு வினைச்சொல் தேவனுடைய ஆசீர்வாதங்களுக்காக நாம் ஈர்க்கப்பட்டு நமக்கு ஏதோ ஒன்று செய்யப்படுவதைக் குறிக்கிறது. நிரப்பப் "பட" (eis) என்பது கிறிஸ்தவ வாழ்வின் நோக்கம் அல்ல, இலக்கு. தேவனுடைய பரிபூரணத்தால் நிரப்பப்பட வேண்டும். இந்தச் சொற்றொடர் அவர் நமக்கு அளிக்கிற கிருபையுள்ள ஈவுகளை மட்டும் குறிப்பிடுவதாயிராமல், தேவனுடைய சகலத்தையும் குறிப்பிடுகிறது. விண்ணப்பம் என்னவெனில் கிறிஸ்தவன் தேவனாலேயே நிரப்பப்பட வேண்டும் என்பதே.*

*பவுலின் மூன்று நிலை விண்ணப்பங்கள் எபேசியருக்காக ஏறெடுத்தது அவர்களுக்கு உதவிசெய்யும் படியாகவே, அதினால் சபையாக, தேவனுடைய திட்டத்தையும் நோக்கத்தையும் மற்றவர்களுக்கும் தெரியப்பண்ண வேண்டும். அவர்கள் தெய்வீக வல்லமையையும், தெய்வீக அன்பின் செயலூக்கத்தையும், அவர்களுடைய வாழ்வில் சாட்சியிடும் தேவனுடைய சுபாவத்தையும் உடையவர்களானதால் அவர்கள் வெற்றி கொள்ள முடிந்தது.*

## துதி *(3:20, 21)*

***[20]நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு [21]சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்.***

*வசனம் 20.* எபேசியர்கள் தேவனுடைய நோக்கத்தை தெரியப்படுத்தினபடியால் அதற்கான வல்லமை அவர்களுக்கு போதுமானதாயிருந்ததாக பவுல் நினைத்தார், எனவே அவர் தேவனுக்கு புகழ்ச்சியை குறிப்பிட்டு எழுதினார். இந்த வசனம் தேவன் **வல்லவராயிருக்கிறார்** என்று பேசுகிறது, இந்த ஒருவாக்கியம் ரோமர் 16:25 மற்றும் யூதா 24 லும் காணப்படுகிறது.

தேவனுடைய வல்லமை நிருபம் முழுவதிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. எபேசியருக்கு பவுல் செய்த முதல் ஜெபத்தில், "விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய மகாமேன்மையான மகத்துவம் இன்னதென்று" அறிந்து கொள்ளும்படிக்குக் கேட்டார் (1:19). அந்த ஜெபத்திற்கும் 3:14-21ல் செய்யப்பட்ட ஜெபம் மற்றும் புகழ்ச்சி செலுத்துதலுக்குமிடையே, பவுல் தேவன் எப்படித் தமது "வல்லமையை" விளங்கப் பண்ணினார் என்று காட்டுகிறார்.

"வல்லவராகிய அவர்" என்பது கிரேக்க வினைச் சொல்லாகிய *dunamai* யிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, மேலும் அதன் பொருள் "செய்யும் திராணி, செய்யும் பெலன், தனது சொந்தத் திறமையால் ஒருவருக்கு இருக்கும் செயலுக்கத் திறன்" என்பன.[13] தேவனுடைய வல்லமை அவரிடத்திலிருந்து வருகிறது. **நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் கிரியை செய்கிற** என்பதன் நேரடிப் பொருள் "எல்லாவற்றுக்கும் மேலாக," "எல்லை கடந்த நிலையில் செயல்படுவது"; **நாம் நினைக்கிறதற்கும் வேண்டிக் கொள்வதற்கும்** மேலாக சாதித்துக்காட்ட தேவனுக்கு வல்லமையுண்டு. பவுல் உறுதிப்படுத்தியது இதுதான்: கிறிஸ்தவர்கள் ஜெபத்தில் கேட்பதற்கு மேலாக செய்ய வல்லவராயிருக்கிறார்; நாம் கேட்கத் தவறியவைகளுக்கும் நினைப்பதற்கும் மேலாக தேவன் கிரியை செய்ய வல்லவராயிருக்கிறார்; நாம் கேட்கிறதற்கும் நினைக்கிறதற்கும் அதிகமாய்ச் செய்ய தேவன் வல்லவராயிருக்கிறார்; நாம் கேட்பதற்கும் நினைப்பதற்கும் அப்பால் பரிபூரணமாய்ச் செய்ய வல்லவராக அவர் இருக்கிறார்; நாம் கேட்கிற எல்லாவற்றுக்கும் அல்லது நினைக்கிறதற்கும் அதிகமாக அவர் எல்லையற்ற காரியங்களை அதிகப் பரிபூரணமாகச் செய்ய வல்லவராயிருக்கிறார்.[14] நாம் கற்பனை பண்ணி பார்க்க முடியாத "தேவனுடைய வல்லமை இப்பொழுது **நம்மிலே கிரியை செய்கிறது.**"

*வசனம் 21.* மகிமை என்ற வார்த்தைக்கு கிரேக்க வசனப்பகுதி யில் அடுத்துவரும் பெயர்ச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது, அது **இந்த** மகிமையைச் சுட்டிக்காட்டி - "மகிமை" (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது) - "நம்மிடத்திலிருந்து செலுத்தப்பட அவர் பாத்திரராயிருக்கிறார்."[15] வசனங்கள் 14, 19 மற்றும் 20, ஆகிய வசனங்களை உள்ளடக்கிய, முன்பின் வரும் வசனப்பகுதி, பிதாவாகிய தேவனே மகிமையைப் பெற்றுக் கொள்கிறார். மகிமை என்பது (*doxa*) எனும் வார்த்தையிலிருந்து வந்தது அதன் பொருள் "மகிமைப்படுத்த, ஏற்றுக் கொள்ள, கனப்படுத்த, துதிசெலுத்துதல்"[16] போன்றவை. தேவனுக்குச் செலுத்த வேண்டிய துதி **சபையிலே** கொடுக்கப்பட வேண்டும், கிறிஸ்துவின் சரீரமாக (1:22, 23) ஒப்புரவாக்கப்பட்டவர்களாலே, (2:16), இரட்சிக்கப்பட்டவர்களாலே (5:23) செலுத்தப்பட வேண்டும். இது தான் தொழுகையிலே தங்கள் இருதயத்திலிருந்து தேவனுக்கு துதி செலுத்தி

*அவருடைய நோக்கத்தை நிறைவேற்றுகிற சபை. இந்த துதி **கிறிஸ்து இயேசுவுக்குள்ளும்** இருக்கிறது, அவர் சபைக்குத் தலையாகவும் சபை ஜீவனுள்ளதாக இருந்து ஊழியம் செய்கிற செயல் எல்லையாகவும் இருக்கிறார்.*

***தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும்*** *என்பது விளக்கவுரை யாளர்களுக்கு சில கடினமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. "தலைமுறை" என்று பவுல் குறிப்பிட்டதன் பொருள் என்ன (வழக்கமாக ஒரே நேரத்தில் வாழ்ந்து கொண்டிருந்த ஜனங்களுக்கோ, ஒருவேளை, முப்பது வருடத்திற்குள் சம்பந்தப்பட்டவர்களுக்கோ குறிப்பிடப்படுகிற பதம் இது) "சதாகாலங்களிலும்" என்றும் சொல்லுவதன் பொருள் என்ன? கருத்து என்னவெனில் தேவனுடைய மக்களாகிய, சபை, தேவனை ("எல்லாத்தலைமுறைகளிலும்") நித்தியத்துக்கும் ("சதா காலங்களிலும்") துதிக்கும், அது தமது நோக்கத்தின் நிறைவேற்றத்துக்காக அப்படிச் செய்யும். "மகிமை தேவனுக்கும் சபையிலும் கிறிஸ்து இயேசுவிலும் வரலாற்றிலும் மேலும் தொடர்ந்து. நித்தியத்திலும் வாசகர்களின் 'ஆமென்' சத்தத்துடன் உறுதியாக்கப்படும்."[17]*

***ஆமென்*** *என்ற வார்த்தையுடன், பவுல் நிருபத்தின் முதல் பாதியை முடிவுக்குக் கொண்டு வந்தார். அவர் கிறிஸ்துவிலும் சபையிலும், தேவனுடைய நித்திய நோக்கத்தைக் குறித்து எழுதினார், நோக்கத்தைக் குறித்து ஆழமான புரிந்து கொள்ளுதலைப் பெற்றுக் கொள்ள ஜெபித்தார், நோக்கத்திற்குப் புறம்பே இருக்கிறவைகளை விவரித்தார், நோக்கம் தேவனால் துவங்கி வைக்கப்பட்டு கிறிஸ்துவில் நிறைவேறியதைக் காண்பித்தார், மேலும் தேவனுடைய நோக்கம் வெளியாக்கப்பட்ட ஒரு இரகசியம் என்பதாகச் சொன்னார். "ஆமென்" என்பதோடு தனது புகழ்ச்சி வார்த்தையை முடித்துக் கொண்டார், பவுலின் வாசகர்கள் தேவனுடைய நோக்கத்தை கைக் கொள்ள தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டார்கள், அது இங்கே இப்பொழுது என்பதில் உள்ள பல்வேறு உறவுமுறைகளின் நோக்கங்களில் சபை எப்படி வாழ வேண்டும் என்பதையறிந்து வாழ்வது. இந்த உறவுமுறைகள் எபேசியர் புத்தகத்தின் இரண்டாவது பாதியை நிறைவு செய்கிறது.*

## கைக்கொள்ளுதல்

### தேவனுடைய வல்லமை இறங்குவது *(3:14-21)*

*பவுல் ஒரு ஜெப வீரன். அவரது நிருபங்கள் மூலம் நாம் அவருடைய தனி ஜெபத்திற்கு செவி கொடுக்கச் செய்திருக்கிறார், அவருடைய ஆழமான வளம் நிறைந்த ஜெப வாழ்வைக்குறித்து ஏதோ சிலவற்றைக் கற்றுக் கொள்கிறோம்.*

*அதிகாரம் 3 ன் முடிவு பகுதிக்கு நாம் வருகின்ற வேளையில், இந்த நிருபத்தில் இரண்டாம் முறையாக தான் ஜெபிக்கிற தேவைகளை பவுல் சொன்னார். 1:15-23 ல், அவர் புரிந்து கொள்ள வேண்டியதில் அக்கறை உள்ளவாரயிருந்தார்; இங்கே அது பயன்பாட்டிற்காகச் சொல்லப்பட்டது. முன்பு ஒருமுறை, எபேசியர்கள் தேவனுக்கு முன்பாக தங்களுக்கு இருந்த ஸ்தானத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்று ஜெபித்தார். இப்பொழுது அந்த ஸ்தானத்திலிருந்து வருகிற வல்லமையை அனுபவிக்கும்படி ஜெபிக்கிறார்.*

*ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்விலும் ஆவிக்குரிய மாற்றத்திற்கான தேவ வல்லமை கிடைக்க பவுல் ஜெபித்தார், மேலும் அந்த*

வல்லமை தேவனுடைய ஐசுவரியத்தின் அளவுப்படி ("ஐசுவரியத்திலிருந்து" அல்ல, "ஐசுவரியத்தின்படி") கிடைக்க வேண்டுமென்று விரும்பினார். தேவன் எவ்வளவு ஐசுவரியமுள்ளவர்? ஒரு போதும் உங்களுக்கு ஏற்பட்டிராத தேவைக்கு மேல்! நமக்கென தேவனிடத்தில் அளவிடமுடியாத ஐசுவரியம் இருக்கிறது, அதை நமக்கென கொடுக்க காத்துக் கொண்டிருக்கிறார்!

தேவனுடைய முழுநிறைவான ஐசுவரியமும் அவருடைய வல்லமை யினாலே நம்முடைய வாழ்க்கைக்கு கையளிக்க நாம் எப்படி அவருடன் ஒத்துழைக்கக் கூடும்? பவுலின் (இந்த) ஜெபம் பதிலளிக்கப்பட ஏராளமான நல் நடத்தைகள் ஒரு கிறிஸ்தவனிடத்தில் நிலைத்திருக்க வேண்டும்.

*முரண்பாடுகளைச் சந்திக்க உள்ளானமனுஷனில் வல்லமையாய் பலப்பட வேண்டும்* (3:16). பவுல் இங்கே ஊழியஞ் செய்ய தேவையான பலனைக் கேட்க வில்லை. அது அவருக்குப் பின்னதாகக் கிடைத்தது. மாறாக, இந்த கிறிஸ்தவர்கள் முரண்பாடுகளைச் சந்திக்க ஏதுவான உள்ளான மனுஷனிலே வல்லமையாய் பலப்பட பவுலின் ஜெபம் இருந்தது, தொடர் போராட்டம் உள்ளான மனுஷனில் தானேயன்றி புறம்பான மனுஷனில் அல்ல.

பவுல் தானே சுய அனுபவத்தால் இந்த பிரச்சனையை அறிந்திருந்தார் (காண்க ரோமர் 7). தன்னுடைய உள்ளான மனுஷனில் சரியெனப்பட்டதைச் செய்தார், ஆகிலும் அது தான் விரும்பாத தீமையையே அது செய்ய வைத்தது. அவருக்கு சரியான விருப்பங்கள் இருந்தன ஆகிலும் அவைகளை நடப்பிக்க ஏதுவான உள்ளான பெலம் இருக்க வில்லை, ரோமர் 7:24, 25ல் "அவர் கதறி அழுது சொன்னதாவது, நிர்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவை ஸ்தோத்தரிக்கிறேன்!"

ரோமர் 8ல், இந்த ஸ்தோத்திரத்திற்கான காரணத்தை அவர் கொடுத்தார். அவர் கிறிஸ்தவனின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் எப்படி கிரியை செய்கிறார் என்கிற இரகசியத்தைக் தெரிந்து கொண்டார்: "மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்" (வசனம் 4).

நாம் தேவனுடைய ஆவியினாலே ஈர்க்கப்பட்டு அவருடைய வல்லமையிலே வாழுகிற வரைக்கும் நம்முடைய உள்ளான மனுஷனில் தோல்வியுற்றவர்களாகவே சுற்றித்திரியக் கூடும். நாம் மறுபடியும் பிறந்த பொழுது, நமக்குத் தேவனுடைய ஆவி கொடுக்கப்பட்டது (நடபடிகள் 2:38) ஆதலால் நமது சரீரங்கள் பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணும் ஆலயமாயிற்று (1 கொரிந்தியர் 6:19). அவர் நம்மிலே வாழ்ந்தாலும், அவரிடத்தில் நாம் ஈர்க்கப்பட்டுள்ள நிலைக்கு அதிகமாக நமக்கு அவர் பெலனைக் கொடுக்க மாட்டார்.

நாம் ஆவியானவருக்கு எப்படிப்பட்ட மனசாட்சியில் வாழ்வின் கட்டுப் பாட்டை ஒப்புக்கொடுத்திருக்கிறோம்? நமது மனம் முழுக்க அவருடைய வார்த்தையினால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும், அதினால் ஆவியானவரின் நடத்துதலுக்குரியவர்களாவோம். கொலொசெயர் 3:16, "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; ..." நாம் நமது ஆத்துமாக்களை முழுமையாக அதிலே முழுக்க வேண்டும் என்று சொல்லுகிறது. "நான் உமக்கு விரோதமாய் பாவஞ்

செய்யாதபடிக்கு, உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்" என்று தாவீது சொன்னார் (சங்கீதம் 119:11).

*கிறிஸ்துவுடனான உறவில் ஒரு ஆழம்* (3:17). பவுல் கிறிஸ்தவர்கள் உள்ளான மனுஷனிலே பெலப்படவும் அதினாலே அவர்கள் மற்றொரு மெய்மையை தங்கள் வாழ்க்கையில் அனுபவிக்கக் கூடும்.

நிச்சயமாக, கிறிஸ்து இந்த ஜனங்களில் முன்னமே இருந்திருக்க வேண்டும், ஏனெனில் பவுல் அவர்களை ஏற்கனவே "பரிசுத்தவான்கள்" என்றழைத்தார் (1:1). அவர்கள் கிறிஸ்துவினிடத்தில் ஆழமான நட்புறவில் வாழ வேண்டும் என்பது அவருடைய விருப்பமாயிருந்தது. அவர்கள் இயேசுவோடு கூட ஐக்கியம் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்பினார். அது அவர் அவர்களுடைய இருதயங்களில் சிங்காசனமிட்டு அமர ஏதுவாக்கும்.

இயேசு தனது சீஷர்களிடத்தில், "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் *கைக்கொள்ளுவான்,* அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்." என்று சொன்னார் (யோவான் 14:23; வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது). இயேசு நம்முடைய இருதயங்களில் வாசம் பண்ண ஏதுவாக்கும் திறவுகோல் கீழ்ப்படிதல், ராஜா அங்கே பாதுகாப்பாய் வாசம் பண்ணுகிறார், அவர் இடையூறு ஏதுவுமில்லாமல் மிகவும் நிறைவான நிலையில் தமது வல்லமையையை பிரயோகித்து அவருடைய குடிமக்களின் வாழ்விலே செயல்படுகிறார்.

*பிறரிடத்தில் அன்புகூருதல்* (3:17-19). தேவனுடைய குணாதி சயத்தின் தரக்குறியீடு அன்பு. நமது வாழ்க்கையை ஆள ஏதுவாக நமது இருதயங்களில் இயேசு வீற்றிருக்கும்போது, பிறகு நாம் அவருடைய அன்பை மற்றவர்களிடத்தில் காட்டுகிறோம். இந்த அன்புதான் நமது அயலார்களிடத்திலே சத்தியத்தைப் பேச விருப்பமளிக்கிறது. இந்த அன்பு தான் முன்பு திருடிக் கொண்டிருந்த ஒருவனை மற்றவர்களிடத்தில் திருடாமல் இருக்கச் செய்கிறது. ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய பாலுணர்வு ஒழுக்கத்தைக் காத்துக் கொள்ள அன்பு கிரியை செய்கிறது. இந்த அன்புதான் ஒரு மனைவியை தன் புருஷனுக்குக் கீழ்ப்படிந்திருக்கச் செய்கிறது, ஒருபுருஷன் தன் மனைவியை தன்னுடைய சுய சரீரமாக கவனித்துக் கொள்ளச் செய்கிறது.

நாம் நம்மை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு நமது வாழ்க்கை முறையில் அன்பு எனும் அஸ்திபாரம் காணாமல் போயிருக்குமானால், பிறகு கிறிஸ்து இன்னும் நமது இருதயத்தில் அமரவில்லை. கலாத்தியர் 5:22, 23ல் நாம் ஆவியினால் நடக்கும் போது, குறிப்பிட்ட கனியை நம்மில் அவர் கொடுக்கிறார் - அதில் முதலாவதாகச் சொல்லப் பட்டிருப்பது அன்பு, இயேசு தம்மை நம்முடைய இருதயத்தையே வீடாக்கி குடியிருக்க விரும்புவதால், அவருடைய அன்பு தனக்குத் தானே சாட்சியிடக் கூடியதாய் நமது சிந்தனைகளிலும், செயல் களிலும், மற்றும் வார்த்தைகளிலும் கிரியை செய்கிறது.

நாம் அன்பிலே வேரூன்றி நிலை கொள்ளும்போது மட்டுமே கிறிஸ்துவின் அன்பு எவ்வளவாய் அளவற்றது என்பதை நாம் பற்றிக் கொள்ளக் கூடும். கிறிஸ்துவின் அன்பின் அகலமென்ன? எல்லா ஜனங்களையும் மனநெகிழ்வுடன் ஒன்றுபடச் செய்கிற அளவுக்கு அது போதிய அகலமுள்ளது. அவருடைய அன்பின் நீளம் என்ன? அது கடந்தகால நித்தியத்தில் தொடங்கி எதிர்கால

நித்தியம் வரை செல்லக் கூடியது; அது ஒரு போதும் நின்று போகாது. அவருடைய அன்பின் ஆழம் என்ன? பாவிகளிலேயே முதல் தரமான பாவியை உச்சக்கட்ட அருவெறுக்கத்தக்க பாவத்திலிருந்து தூக்கிவிடுகிற அளவுக்கு அது ஆழமானது. அவருடைய அன்பின் உயரம் என்ன? உன்னதங்களிலே கிறிஸ்துவுடனே கூட உட்காரச் செய்கிற அளவுக்கு அது உயரமானது, அவர் உன்னதங்களிலே தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார்.

கிறிஸ்துவின் அன்பு எட்ட இயலாத அளவு தொலைவில் யாருமில்லை. அப்படிப்பட்ட அன்பை நாம் அனுபவிக்கும் போது, நாம் நமது வாழ்வில் தெய்வீக வல்லமையின் வழியில் நன்கு நடத்தப்படுகிறோம்!

*தேவனால் நிரப்பப்பட்டிருத்தல் (3:19).* என்னே ஒரு நம்ப முடியாத வார்த்தைகள்! எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்பகிறவர் நம்மை நிரப்பவிரும்புகிறார் ... அவர் வந்து நம்மிடத்தில் தங்கியிருக்க விரும்புகிறார்! அவருடைய குணாதிசயங்களும், சிறப்பியல்புகளும் நபர்த்துவமும் நம்மில் நிறைந்திருக்க விரும்புகிறார்.

நாம் இயேசுவால் நிரப்பப்பட்டிருக்கும்போது, தேவனுடைய சகல பரிபூரணமும் நமக்குள் இருக்கிறது. தேவன் அன்பாயிருக்கிறபடியால், தேவனுடைய பரிபூரணத்தால் நிரப்பப்பட்டிருக்கிற ஒரு கிறிஸ்தவன் அந்த அன்பை வெளிப்படுத்துவான். தேவன் இரக்கமுள்ளவராயிருக்கிறபடியால், தேவனுடைய பரிபூரணத்தை அனுபவித்துக் கொண்டுள்ள ஒரு கிறிஸ்தவன் மற்றவர்களிடம் இரக்கத்தை விளங்கப் பண்ணுவான். தேவன் பரிசுத்தராயிருக்கிறபடியால், தேவனால் நிரப்பப்பட்டிருக்கிற ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய அன்றாட வாழ்க்கையிலே தேவபக்திக்குரிய பரிசுத்தத்தை வெளிப்படுத்துவார்.

தேவனுடைய சகல பரிபூரணத்தால் நிரப்பப்படுதல் என்பது தேவனுடைய குணாதிசயங்களை நம்மில் கொண்டிருப்பது என்று பொருள், அவருடைய குணாதிசயத்தின் குறைந்த அளவே கொண்டிருந்தாலும், கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாயிருக்கிற நாம் தேவன் எப்படிப்பட்டவராயிருக்கிறார் என்று உலகிற்கு பிரதிபலித்துக் காட்ட முடியும். தேவ பக்தியற்ற சமுதாயத்துக்கு முன்பாக, இயேசுவின் உருவத்தைக் கண்ணாடிகளாகிய நம் மூலமாக தேவன் தமது தெய்வீக அன்பைப் பிரதிபலிக்கிறார்.

*நமது வாழ்க்கைக்குத் தேவையான வல்லமை (3:20).* ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் தேவன் வைத்திருக்கிற வல்லமையை விளக்கப்பண்ணத் தங்களை மாற்றி கொள்வோர் குறைவுபட்ட நிலையில் ஏறத்தாழ பவுல் இருந்தார்.

இப்பொழுது *செய்ய வல்லவருக்கு* ...

இப்பொழுது நாம் *வேண்டிக் கொள்கிறவைகளை (எதுவோ)* செய்யவல்லவருக்கு ...

இப்பொழுது நாம் *வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைப்பதற்கும்* செய்யவல்லவருக்கு ...

இப்பொழுது நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைப்பதற்கும்

*அதிகமாய்ச் செய்ய* வல்லவருக்கு ...

இப்பொழுது நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைப்பதற்கும் *மிகவும் அதிகமாய்ச் செய்ய* வல்லவருக்கு ...

... நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே.

தேவன் நம்முடைய சொந்த பெலத்தினாலும் வல்லமையினாலும் நடக்கச் சொல்லுவதில்லை. நம்மை தெரிந்து கொண்டவரும் நம்மை மீட்டவரும் நம்மை முத்தரித்தவரும், நம்மை ஆவிக்குரிய மரணத்திலிருந்து எழும்பினவரும் மற்றும் தமது வலது பாரிசத்தில் உட்கார வைத்தவருமாகிய அவர் நம்முடைய வாழ்க்கையை சந்திக்கத்தேவையான வல்லமையை கொடுப்பதன் மூலம் ஆரம்பித்தவர் நிறைவேறவும் செய்வார். இதற்கு அளவு இல்லை! நமது வாழ்வுக்கான அவருடைய வல்லமை எடுக்க எடுக்க குறைவு படாதது.

*முடிவுரை.* குறைவுபடாத வல்லமையை நமது வாழ்க்கையில் ஏன் வைத்தார்? "சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்" (3:21), தேவன் மகிமைப்படுத்தப்பட விரும்புகிறார். அவர் எவ்வளவு நல்லவர், எவ்வளவு மகத்துமானவர் என்பதை ஜனங்கள் உண்மையில் காண வேண்டுமென்று அவர் விரும்புகிறார். சபை வாழ்க்கையிலே அவருடைய வல் லமையைக் கண்ணுறும்போது அந்த மகிமை அவருடையதாகிறது.

கிறிஸ் புல்லார்டு

---

குறிப்புகள்

[1]Ethelbert W. Bullinger, *A Critical Lexicon and Concordance to the English and Greek New Testament* (London: Samuel Bagster and Sons, n.d.; reprint, Grand Rapids, Mich.: Zondervan Publishing House, Regency Reference Library, 1975), 836. [2]Ibid., 769. [3]Kenneth S. Wuest, *Wuest's Word Studies from the Greek New Testament for the English Reader: Ephesians and Colossians* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1953), 88. [4]S. D. F. Salmond, "The Epistle to the Ephesians," *in The Expositor's Greek Testament,* ed. W. Robertson Nicoll (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1967), 3:314. [5]Andrew T. Lincoln, *Ephesians,* Word Biblical Commentary, vol. 42 (Dallas: Word Books, 1990), 206. [6]Bullinger, 347. [7]Ibid., 175. [8]Lincoln, 208–14. [9]Bullinger, 436. [10]Lincoln, 214. [11]Wuest, 90. [12]Lincoln, 213. [13]Spiros Zodhiates, ed., *The Complete Word Study New Testament*, 2d ed. (Chattanooga, Tenn.: AMG Publishers, 1992), 907. [14]Lincoln, 216. [15]R. C. H. Lenski, *The Interpretation of St. Paul's Epistles to the Galatians, to the Ephesians and to the Philippians* (Columbus, Ohio: Wartburg Press, 1946; reprint, Minneapolis: Augsburg Publishing House, 1961), 500. [16]Zodhiates, 907. [17]Lincoln, 218.